# *உயிரின் உயிரே!*

இம் மாதம், அதாவது 2018-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ஆம் நாளன்று அமெரிக்காவின் போஸ்டன் **(Boston)** நகரத்தின் நாற்பத்து இரண்டு கிலோ மீட்டர் **(42 kilometers)** மாராத்தோன் **(Marathon)** ஓட்டப் பந்தயம் நடைபெறவிருக்கின்றது. எங்கள் கியுபெக் மாகாணத்திலிருந்து மொத்தம் அறுநூறு பேர் (600 **people**) இந்தப் போட்டியில் பங்கு பெற்றப் போவதாகத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். இதில் கியுபெக் மறை மாவட்டத்தைச் சார்ந்த குருவானவர் ஒருவரும் இருக்கின்றார். இந்த அறு நூறு பேரில் ஒரு சிலர் எழுபது வயதைத் தாண்டியவர்கள். இந்த அறுநூறு பேரில் ஒரு சில பெண்களும் அடங்குவர்.

சென்ற முறை மொன்றியால் நகரில் இரத்தப் புற்று நோய்க்காக **(blood cancer – Leukemia)** நடை பெற்ற மரத்தோன் போட்டியில் ஒரு சிலர் ஒரு கிலோ மீட்டர் தூரம் ஓடினர். ஒரு சிலர் ஐந்து கிலோ மீட்டர் தூரம் ஓடினர். ஒரு சிலர் பத்து கிலோ மீட்டர் தூரம் ஓடினர். ஒரு சிலர் பாதி மாரத்தோன் (இருபத்தோறு கிலோ மீட்டர்) **(semi-marathon : 21 km)** ஓடினர். ஒரு சிலர் முழுமையாக ஓடி, ஓட்டப் பந்தயத்தை முடித்தனர். மொத்தம் முப்பத்து இரண்டாயிரம் பேர் இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்றனர் (32,000 **people**). இதிலிருந்து கிடைத்த பத்து மில்லியன் டொலர்களை இரத்த நோய் ஆராய்ச்சிக்காக அர்ப்பணித்தனர்.

இந்நிகழ்ச்சிகளிலிருந்து எங்களுக்கு என்ன தெரிகின்றது என்றால், உயிரின் சக்தி இதிலிருந்து எங்களுக்கு விளங்குகின்றது. உடம்பில் உயிர் இருந்தால் எந்தச் சவாலையும் நாங்கள் சந்திக்கலாம் என்பதுவே உயிர்ப்பு விழாவின் உள்ளர்த்தம். இந்த முப்பத்து இரண்டாயிரம் பேரும் அறிந்தோ அறியாமலோ கிறிஸ்துவின் உயிர்ப்புக்குத் தங்கள் வாழ்க்கையில் சான்று பகர்கின்றனர். கிறிஸ்துவின் உயிர்ப்பு எங்கள் வாழ்க்கை அனுபவமாக மாற வேண்டும் என்பதனையே நான்கு நற்செய்திகளும் புனித பவுலடியாரின் திருமுகங்களும் புதிய ஏற்பாட்டில் எங்களுக்கு விளங்க வைக்க முயற்சி செய்கின்றன.

கிறிஸ்துவுடன் உயிர்த்து விட்ட மனிதர்களாக நாங்கள் திகழ என்னென்ன அருங்குறிகள் எங்கள் வாழ்க்கையில் வெளிப்பட முடியும் என்பதனை இறைவன் புனித பவுலடியாருக்கு விளங்க வைத்தது போல் எங்களுக்கும் விளங்க வைப்பாராக. "*ஆண்டவரைத் தேடுவோரின் இதயம் அக்களிப்பதாக. ஏனெனின் வாழ்வின் ஊற்று அவரே*" என்று சங்கீதத்தில் தாவீது மன்னன் இசை எழுப்பும் பொழுது ' (திருப்பாடல் 105) தரையிலே விழுந்து கிடந்த தன்னை எவ்வாறு இறைவன் மீண்டும் உயிர்ப்பிக்கச் செய்தார் என்பதைத் தானே அவர் பாடுகின்றார்.உலகில் வாழ்வுக்கும் சாவுக்கும் நடக்கும் போட்டியில் இறுதியில் வெற்றி வாழ்வின் தேவனுக்கே என்ற உண்மையை அவர் தன் வாழ்க்கை அனுபவத்திலிருந்து புரிந்து கொண்டார்.

தேவனின் அருள் எம்மைத் தொட்டால் நாமும் உயிர் பெற்று எழலாம். இந்த உண்மையை நற்செய்தியின் ஊடாக நாங்கள் உணர்கின்றோம்: "*நீங்கள் கேட்பவற்றையும் காண்பவற்றையும் யோவானிடம் போய் அறிவியுங்கள். பார்வையற்றோர் பார்வை பெறுகின்றனர். கால் ஊனமுற்றோர் நடக்கின்றனர். தொழு நோயளர் நலமடைகின்றனர். காது கேளாதோர் கேட்கின்றனர். இறந்தோர் உயிர் பெற்று எழுகின்றனர். ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கப் படுகிறது. என்னைத் தயக்கமின்றி ஏற்றுக் கொள்வோர் பேறு பெற்றோர்.*" (மத்தேயு 11:4-6).

கிறித்துவின் உயிர்ப்புச் சக்தி எம்மையும் ஆட்கொண்டு எம்மை வாழ வைப்பதாக!

அனைவருக்கும் உளங்கனிந்த வசந்த கால வாழ்த்துக்கள்!

கிறித்துவில் அன்புடன்,